அரசிற்கு வழங்கிய செஸ் தொகையிலிருந்துதான் நெசவாளர்களுக்குத் தொழிற்கருவகள் வாங்கித் தரப்பட்டு வந்தன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், பழைய தறிகளையேத்தான் நெசவாளர்கள் உபயோகித்து வருகிறார்கள். புதுத் தறிகள் வாங்கித் தருவதற்கான திட்டங்கள் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதைப் பொறுத்தவரையில், மத்திய அரசு தனது பொது நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி வளர்ச்சிக்காக மொத்தமாக ஒரு கணிசமான தொகையை மாநில அரசுக்கு அளித்து வருகிறது. அதனபடி கைத்தறி வளர்ச்சிக்காக மாநில அரசு செலவிடும் தொகையில் 50 சதவீதம் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள 50 சதவீதம் செலவை மாநில அரசு ஏற்கிறது. தற்போது நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வாங்கவும், ஏற்கனவே உள்ள கருவிகளை நவீனப்படுத்தவும் தறி ஒன்றுக்கு ரூ. 2,500 வரை மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் ஒரு பங்கு மானியமாகவும் இந்த அரசு கொடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் மூலமாக 'இன்டர்நேஷனல்' என்ற தனி அமைப்பு வைத்து இருக்கிறார்கள். அந்தத் தனி அமைப்பு மூலமாக வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது வெளிநாடு சென்று தொழில் நுணுக்கம் அறிந்து வந்ததுபோல், நெசவாளர் பொது நல நிதியிலருந்து செலவுசெய்து, நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் ஆண்டுக்கு 3 பேர் அல்லது இரண்டு பேர்களை கோவாப்டெக்ஸ் மூலமாகத் தொழில் நுணுக்கம் தெரிந்து வருவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்கள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோவாப்டெக்ஸ் பொது நல நிதியில் தற்போது எவ்வளவு பணம் சேர்ந்துள்ளது? எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியை ஒட்டி இல்லாத காரணத்தால் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கப்படும்.

காட்பாடியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

வினா எண். 753 திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

1981 ஏப்ரல் 14]

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடி தொகுதியில் உள்ள காட்பாடி கால்நடைப் பராமரிப்பு நிலையத்தில் புதிதாக வரும் கால்நடைகளுக்குத் தடுப்பு மருந்து இல்லை என்று கூறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) காட்பாடி கால்நடை மருந்தகத்தில் தடுப்பூசி போடுவதற்காகக் கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு சப்பை நோய், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு இலவசமாகத் தடுப்பு செய்ய வசதி உள்ளது. ஆனால் கோமாரி நோய்க்கு இலவசமாகத் தடுப்பு ஊசி போடுவதில்லை. கோமாரி நோய் தடுப்பு மருந்தனை விலைக்கு வாங்கி தடுப்பூசி செய்து கொள்ள விவசாயிகளுககுத் தக்க அறிவுரைகள் வழங்கப் படுகினறன. சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கோமாரி தடுப்பூசி மருந்தின் விலையில் 50 விழுக்காடு மான்யமாக வழங்கப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் வேலூர் மண்டலத்திற்கு 10,000 டோஸ்கள் கோமாரி தடுப்பூசி மருந்துகள் விலைக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் காட்பாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில்—குறிப்பாக தாராபடுகை, காட்பாடி, தருமபுரம், காந்திநகர், செங்குட்டை, சேனூர், அரும்பகுதி ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கு நோய் வந்த நேரத்தில், காட்பாடி கால்நடை பராமரிப்பு இல்லத்தில் மருந்து இல்லாது இருந்த காரணத்தால்ப் கிட்டதட்ட 90—க்கும் மேற்பட்ட கன்றுகள், மாடுகள் இறந்து போய்விட்டன என்கிற தகவல் அரசுக்குத் தெரியுமா?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஆடு மாடுகள் இறந்தது பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க முடியும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, அந்தப் பகுதியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு இல்லங்கள் பெருமாள் குப்பம், காளாம்பட்டு சேர்க்காடு போன்ற பகுதிகளில் உள்ளவை களில் கடந்த 3, 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆய்வாளர்கள் இல்லை. ஆகவே, உடனடியாக அந்த இல்லங்களில் ஆய்வாளர் களை நியமிக்கவும், ஏற்கனவே கால்நடைகள் இறந்து போனவர் களுக்கு மானியம் கொடுக்கவும், மானியம் கொடுக்கவில்லை என்றால் கடனாவது கொடுக்க சிபாரிசு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஆய்வாளர்கள் இல்லை என்றால் அந்த விவரத்தைக் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆடுமாடுகளை இன்ஷ்யூர் செய்திருந்தால் நஷ்டயீடு கொடுக்கப்படும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, இந்தக் கோமாரி நோய்க்குத தடுப்பு ஊசி இலவசமாகப் போடுவது இல்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரிவிப்பார்களா? இரண்டாவதாக விவசாயிகளே வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு 50% மானியம் அளிப்பதாகவும் சொன்னார்கள். அதன் விலை எவ்வளவு? ஒரு மாட்டுக்குக் கோமாரி நோய் வந்தால் எவ்வளவு ஊசி போட வேண்டும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, ஒரு ஊசி விலை 8 ரூபாய். கோமாரி நோய் பலவிதமான நுண் கிருமிகளால் ஏற்படுகிறது. ஒவ்வொரு வகை நுண் கிருமிக்கும் ஒவ்வொரு வகையான ஊசி போட வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒரு ஊசி போட்டால் அந்த நோய் தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகையால் நுண் கிரிமிகளின் தன்மையை அறிந்து ஊசி போட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

உடையார் பாலளயத்தில் கால்நடை மருத்துவமனை
அமைக்கும் திட்டம்

*வினா எண். 754 திரு. பி தங்கவேலு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்தக் கால் நடை மருத்துவமனை எப்போது துவங்கப்பெறும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:— (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

திரு. த. ஆறுமுகம்: தலைவரவர்களே, உடையார்பாளையம் ஒரு வட்டமாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் அதிகமான கிராமங்கள் இருப்பதாலும், அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும் இந்த ஆண்டு அந்த மருத்துவனை தொடங்கப்படுமா?